C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 18

JULY 2026

ஆகாரம் : 07

பலியைப் பார்க்கிலும்

**கீழ்ப்படிதலும்,**

ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும்

**செவிகொடுத்தலும்**

**உத்தமம்**

*I சாமுவேல் 15:22*

# UPCOMING EVENTS

**All Sun July '26** — Sunday
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**04 July '26** — Saturday
10:30am
**FASTING PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**11 25 July '26** — Saturday
7:30pm - 09:30pm
**EVENING CHURCH SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**04 18 July '26** — Saturday
7:30pm - 09:30pm
**HOLY COMMUNION SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Wed July '26** — Wednesday
7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**25 July '26** — Saturday
9:30 pm
**BIBLE QUIZ**
JEREMIAH 31-52 & LAMENTATIONS 1-5
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**31 July '26** — Sunday
11:30 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish Alain




**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். உரோமைப் பேரரசின் மாமன்னர் ஜூலியஸ் சீசர் நினைவாகவே ஜூலை என ஏழாம் மாதத்திற்கு பெயரிடப்பட்டது. ஆண்டின் இரண்டாவது பாதியின் தொடக்கம் என்றும் கொண்டாடப்படுகிறது.**

1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20—ஆம் தேதி நிலவை ஆராய்ச்சி செய்வதற்காக பைலட்டாக திரு.எட்வின் ஆல்ட்ரின் அவர்களும், கோ—பைலட்டாக திரு.நீல் ஆம்ஸ்ட்ராங் அவர்களும் விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நிலவை அடைந்தவுடன் கீழே இறங்க பைலட் எட்வின் ஆல்ட்ரின் அவர்களுக்கு கீழே இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது அவர் ஓரிரு வினாடிகள் நிலவில் இறங்க சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில், உடனடியாக கோ—பைலட்டாக சென்ற நீல் ஆம்ஸ்ட்ராங் அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்த உடன் அவர் நிலவில் இறங்கினார். அதுதான் இன்று வரை வரலாற்றில் முதன் முதலில் கால் பதித்த விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ராங் என்று சொல்லப்படுகிறது. இதற்கான அடிப்படைக் காரணம் அவருடைய கீழ்ப்படிதலே ஆகும். அப்போதைய போப் திருத்தந்தை 6 ஆம் பால் அவர்கள் அமெரிக்க விண்வெளி வீரர்கள் திரு.ஆம்ஸ்ட்ராங், திரு.ஆல்ட்ரின் அவர்களின் கைகளில் கொடுக்கப்பட்டு நிலவில் வைக்கப்பட்ட புகழுடைய சங்கீதம் 8 ஆகும் இதுதான் நிலவில் வைக்கப்பட்ட முதல் திருமறைப் பகுதி ஆகும். இதில் கடவுளின் படைப்பின் மாட்சியையும், கடவுளால் மனிதர் பெற்ற மாட்சியையும் காண முடிகிறது. படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க—தமிழ் இலக்கியம்.

பிரியமானவர்களே, இம்மாத வாக்குத்தத்த திருமொழியில் காண்பதுவும் இதுவே. “பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம் (1 சாமுவேல் 15:22)” என்பதே.

## கீழ்ப்படிதல்:

அன்றைய இஸ்ரவேலர் தங்கள் வாழ்வில் கர்த்தருக்கு பலியைச் செலுத்தி, கர்த்தரை நெருங்கி வாழலாம் என்று நினைத்தனர். ஆனால் கர்த்தருடைய திருவார்த்தை தெளிவுறக் கூறுகிறது “பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் உகந்தது” என்றே கூறுகின்றது. கர்த்தருடைய வார்த்தையின்படியே,தான் கண்டிராத மக்களிடத்திலே அந்நிய நாட்டிற்கு ஆபிரகாம் சென்றார், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தார் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்டார், ஆபிரகாமின் சந்ததியாரும் ஆசிர்வதிக்கப்பட்டனர். கர்த்தர் விரும்புகிற கீழ்ப்படிதல் நம்மில் எத்தகையதாக இருக்கின்றது?

## செவிகொடுத்தல்:

ஆண்டவருடைய வார்த்தைக்கு செவி கொடுத்தல் முக்கியமானது, முதன்மையானது. அதனால் தான் ஒவ்வொரு முறை தமது போதனையின் போதும் ஆண்டவர் இயேசு கூறியது, காதுள்ளவன் கேட்கக் கடவன் என்றார். கர்த்தருடைய சத்தத்திற்கு செவி கொடுங்கள் (1சாமுவேல் 15:22). முதலாவது இறை வார்த்தையின் சத்தம் கேட்டு, அவர் சித்தம் செய்ய வேண்டும்,அதற்காகவே நாம் அழைக்கப்பட்டு இருக்கின்றோம். இன்றைய உலகச் சூழலில், இரைச்சல் மிகுந்த—இடைஞ்சல் தருகின்ற பலவித நெருக்கடியான வேளைகளில் கர்த்தரின் சத்தம் கேட்கும் மக்களாக நம்மை அவர் திருச்சமுகத்திலே தாழ்த்துவோம். நிறைவாக, ஆபிரகாம் ஆண்டவரின் வார்த்தைக்கு செவி கொடுத்தார், கீழ்ப்படிந்தார் ஆசீர்வதிக்கப்பட்டார்.

நீல் ஆம்ஸ்ட்ராங் அரசாங்க வார்த்தைக்கு செவி கொடுத்தார், கீழ்ப்படிந்தார் இன்றளவும் வரலாற்றில் பேசப்படுகின்றார்.

பிரியமானவர்களே, நமது நிலைப்பாடு என்ன? ஒவ்வொருவரும் சிந்திப்போம். ஆண்டவரின் வார்த்தைக்கு செவி கொடுப்போம், இறைவார்த்தைக்கு கீழ்ப்படிவோம், ஆசீர்வதிக்கப்படுவோம், ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan



# சுகம் அடைந்தப் பெண்கள்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள். பரிவுமிகுந்த ஆண்டவர் இயேசுவால் சுகம் அடைந்தோர் ஏராளம், தாராளம், எண்ணில் அடங்காதோர் ஆவர். அவர்களுள் சுகம் பெற்ற இரண்டுப் பெண்களை மட்டும் இப்பகுதியில் சற்று சிந்திப்போம்.

மனிதப் பார்வைக்கு சிறிதாகத் தோன்றலாம், பெரிதாகத் தோன்றலாம். ஆனால் ஆண்டவர் இயேசுவின் பார்வைக்கு அனைத்தும் லேசானவையே. மனிதம் சோர்வுறும், மருத்துவம் தோல்வியுறும். ஆண்டவர் இயேசு என்றால் அங்கே வெற்றி, வெற்றி, வெற்றியே. பேயிலிருந்தும் விடுதலை, நோயிலிருந்தும் விடுதலை. உச்சமாக மரணத்தையே வென்றவர். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஜெயங்கொடுக்கிறவர் (1 கொரி15:57). எனவே, ஆண்டவர் இயேசுவையே இறுகப் பற்றிக் கொள்வோம்.

## இயேசு தொட்டார்:

ஆண்டவர் இயேசு, தமது சீடர் பேதுருவின் வீட்டிற்கு வந்து அங்கே அவரது மாமி ஜுரமாய் கிடக்கிறதைக் கண்டு, அவரைத் தொட்டார், உடனே ஜுரம் நீங்கி சுகம் பெற்றார் (மத்8:14,15).

## பணிவிடைச் செய்தார்

பேதுருவின் மாமி தாம் சுகம் அடைந்தப் பிறகு, இயேசுவுக்கும் அவரின் சீடர்களுக்கும் பணிவிடை செய்தார் (மத் 8:15). பிரியமானவர்களே ஆண்டவர் இயேசு கிறிஸ்து தொட்ட உடனே பேதுருவின் மாமிக்கு ஜுரம் நீங்கியது, சுகம் கிடைத்தது.சுகம் பெற்று அவர்களுக்கு பணிவிடை செய்தார். இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, ஆண்டவர் இயேசுவை பற்றி பிடித்து சுகமும், நிறைவும் பெற்றிடுவோம், தொடர்ந்து ஆண்டவரின் திருப்பணிவிடைகளை செய்திட நம்மையே அர்ப்பணித்திடுவோம், அப்போது நாம் ஆசீர்வதிக்கப்படுவோம்.

## இயேசுவைத் தொட்டார்:

12 ஆண்டுகளாக பெரும்பாடுள்ளப் பெண் தனக்கானதை எல்லாம் வைத்தியர்களிடம் செலவழித்து, சிறிதும் சுகம் அடையாத நிலையில் ஆண்டவர் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு அவரை நான் தொட்டாலே சுகம் அடைவேன் என்று தேடிச் சென்றார் (மாற் 5:25—27). அப்படியே ஜனக்கூட்டத்துக்குள்ளே சென்று, ஆண்டவர் இயேசுவைத் தொட்டார் சுகம் பெற்றார்(மாற் 5:28,29)

## உண்மையைச் சொன்னார்:

சுகம் அடைந்தப் பெண்ணாக தன் வாழ்வில் ஏற்பட்ட கடந்தக் கால கடினமான சூழலையும், தற்போது சுகம் அடைந்த அற்புதமான நிகழ்வையும் எல்லோரும் அறிய இயேசுவின் வல்ல செயலை உண்மையாக அனைவருக்கும் முன்பாகக் கூறினார்(மாற் 5:33). நிகழ்வின் வழியே நாம் கற்றுக் கொள்வது, ஆண்டவர் இயேசுவைத் தேடி வந்தால் சுகம் கிடைக்கும்.

அவரது வல்லச் செயல்களை, இரட்சிப்பைக் கண்டு கொண்டு அனுபவித்திருக்கிற நாமும் எல்லோருக்கும் முன்பதாக மெய் கிறிஸ்தவர்களாக வாழ்வோம், ஆண்டவர் ஆசீர்வதிப்பார்.

ஆண்டவர் இயேசு தொட்டாலும் சுகம், ஆண்டவர் இயேசுவைத் தொட்டாலும் சுகம். இத்தனை வல்லமை மிகுந்த ஆண்டவர் இயேசுவை நாமும் விசுவாசத்தோடு பற்றிக் கொண்டு வாழ்வோம், ஆண்டவர் இயேசு நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.




இறைப்பணியில்,

ஆயரம்மா



*Mrs .P.Velanganni*

## மன்னா ஜூன்-26 மீள் பார்வை




ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு மகிமை. ஜூன் மாத மன்னாவைக் குறித்த ஒரு மீள் பார்வை, பக்-3, ஆயர் மடலில் கர்த்தரே பெலன் கொடுக்கின்றவர், நிறைவைத் தருகின்றவர் என்றும், பக்-4ல், தாயுள்ளம் கொண்ட அன்பு மிக்கவரான ஆண்டவரையேப் பற்றிக் கொள்வோம் என்றும், பக்-6, செயலர் மடலில் நமது திருச்சபையின் கடந்த கால ஊழியர்கள், ஊழியங்கள் பற்றியும், பக்-7ல், திருச்சபை என்பது அன்பும் ஐக்கியமும் நிறைந்த கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்ட உன்னத உறைவிடம் என்றும், பக்-8ல், புத்தியுள்ள-பக்தியுள்ள மக்களாக கர்த்தரின் வழி வாழ வேண்டும் என்றும், பக்-9ல், துன்பத்தில் உற்றத் துணையாக, உண்மையான நண்பராக ஆண்டவர் இயேசு இருப்பார் என்றும், பக்-10ல், நமது திருச்சபையின் புதிய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பொறுப்புகளின் விவரங்களைப் பற்றியும், பக்-11ல், திருமறை வினாக்கள்-விடைகள் மற்றும் விடைகளை எழுதியுள்ளோர் பெயர்களையும், தொடர்ந்து சிறுபிள்ளைகளின் கைவண்ணங்களும், சிறு பிள்ளைகளுக்கான புதிர்கள் மற்றும் ARTICLE எழுதின அனைவருக்கும் பாராட்டுக்கள். கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே... வழிகாட்டியாகவும் பாதுகாவலராகவும் இருந்து நம்மை நடத்தி வரும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில், உங்கள்அனைவருக்கும் வாழ்த்துகள் கூறுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

நிகழ் ஆண்டின் முதல் பாதியை கடந்து வர கிருபை அளித்த நம் தேவனுக்கு நன்றியுள்ள மனதோடு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

கடந்த 13.06.2026 அன்று நடைபெற்ற ஆண்கள் ஐக்கிய சங்க ஆராதனை மிகவும் சிறப்பாகவும் ஆசீர்வாதமாகவும் அமைந்தது. அதனை சிறப்பாக நடத்த உற்சாகத்துடன் செயல்பட்ட ஆண்கள் ஐக்கிய சங்கப் பொறுப்பாளர் திரு. ராஜேஷ் அன்பு மற்றும் அனைத்து ஆண்கள் ஐக்கிய சங்க உறுப்பினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 20.06.2026 அன்று நடைபெற்ற சிறுவர் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற, அர்ப்பணிப்புடன் உழைத்த சிறுவர் வேதாகமப் பள்ளிப் பொறுப்பாளர் திருமதி. ஜெயந்தா பெல்ஃபர், சிறுவர் வேதாகமப் பள்ளி ஆசிரியர்கள், ஒத்துழைத்த அனைத்து பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த நாட்களில் பலவீனமாக இருந்த திரு. ரவிந்திரா மற்றும் திரு. கண்மணி ராஜா ஆகியோருக்கு தேவன் அருளிய நல்ல சுகத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

இந்த விடுமுறை நாட்களில் தாயகம் செல்லப் பயணிக்கும் அனைவரையும் தேவன் பாதுகாத்து, தமது கிருபையால் வழிநடத்த ஜெபிப்போம்.

சர்வவல்ல தேவனின் அளவிட முடியாத கிருபை உங்கள் அனைவருடனும் இருந்து, உங்களை ஆசீர்வதிப்பதாக.




**இறைப் பணியில்**

Mr. Belfer John Sigamoni

திருச்சபைச் செயலர்



# தேவனுடைய மனிதர்கள்: உறுதியாக நிற்க அழைக்கப்பட்டவர்கள்

### அறிமுகம்

இன்றைய வேகமான உலகில், ஆண்கள் வேலை, குடும்பம், நிதி மற்றும் தனிப்பட்ட போராட்டங்கள் என தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு உள்ளாகிறார்கள். ஆயினும், ஆண்களுக்கான தேவனுடைய அழைப்பு ஒருபோதும் மாறவில்லை. தங்கள் வீடுகளிலும் சமூகங்களிலும் வலிமையான, விசுவாசமுள்ள, ஆவிக்குரிய ரீதியாக உறுதியான தலைவர்களாக இருக்கும்படி அவர் ஆண்களை அழைக்கிறார். "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்." 1கொரிந்தியர் 16:13 இந்தச் செய்தி உடல் வலிமையைப் பற்றியது மட்டுமல்ல, ஆவிக்குரிய முதிர்ச்சி, ஒழுக்கம் மற்றும் பொறுப்புணர்வைப் பற்றியதுமாகும்.

## 1. விசுவாசமுள்ள மனிதன்

தேவபக்தியுள்ள மனிதன் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நல்லதோ கெட்டதோ தேவனை நம்புகிறான். விசுவாசம் என்பது காரியங்கள் நன்றாக நடக்கும்போது நம்புவது மட்டுமல்ல, வாழ்க்கை கடினமாகும்போது உறுதியாகப் பற்றிக்கொள்வதாகும்.

* தொடர்ந்து ஜெபியுங்கள்
* தேவனுடைய நேரத்தை நம்புங்கள்
* அவருடைய வார்த்தையைச் சார்ந்திருங்கள்

"நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்; அவனுக்குப் பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள்." — நீதிமொழிகள் 20:7. ஒரு மனிதன் விசுவாசத்தில் நடக்கும்போது, அது அவனுடைய வாழ்க்கைக்கு மட்டுமல்ல, அவனுடைய முழு குடும்பத்திற்கும் ஆசிர்வாதமாய் அமைகிறது.

## 2. ஜெப மனிதன்

ஜெபம் ஒரு வலிமையான ஆவிக்குரிய வாழ்க்கையின் அடித்தளமாகும். ஜெபிக்கும் ஒரு மனிதன் தேவனுடன் இணைந்திருக்கும் மனிதன்.

* ஜெபத்துடன் நாளைத் தொடங்குங்கள்
* குடும்பம், வேலை மற்றும் திருச்சபைக்காக ஜெபியுங்கள்

"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." யாக்கோபு 5:16. ஜெபம் பலவீனம் அல்ல—அது பெலன்.

## 3. பொறுப்புள்ள மனிதன்

தேவன் மனிதர்களுக்குப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார் வழிநடத்த, பாதுகாக்க, மற்றும் பராமரிக்க.

* உங்கள் குடும்பத்தை ஆன்மீக ரீதியாக வழிநடத்துங்கள்
* வேலையில் நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் இருங்கள்
* உங்கள் செயல்களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்." 1 தீமோத்தேயு 5:8. பொறுப்பு என்பது ஒரு சுமையல்ல; அது ஒரு அழைப்பு.

## 4. குணநலன் மிக்க மனிதர்

வெற்றியையோ செல்வத்தையோ விட குணநலனே ஒரு மனிதனை வரையறுக்கிறது.

* யாரும் பார்க்காதபோது நேர்மை
* வெற்றியில் பணிவு
* சவால்களில் பொறுமை

"பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்." நீதிமொழிகள் 16:32. வலுவான குணநலன் நம்பிக்கையையும் மரியாதையையும் உருவாக்குகிறது.

## 5. முன்மாதிரியாக வழிநடத்தும் மனிதர்

தலைமைத்துவம் என்பது பதவியைப் பற்றியது அல்ல—அது செல்வாக்கைப் பற்றியது.

* வீட்டில் ஒரு முன்மாதிரியாக இருங்கள்
* அன்பு, மரியாதை மற்றும் மன்னிப்பைக் காட்டுங்கள்

"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.." 1கொரிந்தியர் 11:1. உங்கள் வாழ்க்கை மற்றவர்கள் வாசிக்கும் ஒரு செய்தியாகும்.

## முடிவுரை

தேவன் பரிபூரணமான மனிதர்களைத் தேடுவதில்லை மாறாக, மனமுவந்து செயல்படும் மனிதர்களையே தேடுகிறார். வளரவும், மாறவும், தினமும் அவருடன் நடக்கவும் தயாராக இருக்கும் மனிதர்களையே தேடுகிறார தேவனுடைய மனிதர்களாகிய நாம்:

* விசுவாசத்தில் உறுதியாக நில்லுங்கள்
* ஜெபத்தில் அர்ப்பணிப்புடன் இருங்கள்
* நேர்மையுடன் வாழுங்கள்
* அன்புடன் வழிநடத்துங்கள் - ஆமென்

Article by

**MR. PREM AARON**

MEN'S FELLOWSHIP




**"நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய்ப் பதிலளிப்பார் – மத்தேயு 6:6**

ஒரு ஸ்திரீயின் வாழ்க்கை எப்போதும் பார்வையில் இருக்கிறது. குடும்பம் பார்க்கிறது, சபை பார்க்கிறது, சமூகம் பார்க்கிறது. நல்ல மனைவி, நல்ல தாய், நல்ல ஊழியக்காரி என்று பெயர் எடுக்க ஓடிக் கொண்டே இருக்கிறோம். ஆனால் இயேசு ஒரு இரகசியத்தை சொன்னார். உன் பெலனின் ஊற்று மறைவான இடத்தில் இருக்கிறது. வேதத்தில் மறைவான இடத்தைத் தேடின ஸ்திரீகள்:

### 1. அன்னாள் – மௌனத்தின் ஜெபம்

தேவாலயத்தில் ஜனங்கள் மத்தியில் இருந்தாலும் அவள் தன் இருதயத்தை மட்டும் தேவனுக்கு முன்பாக ஊற்றினாள். உதடு மட்டும் அசைந்தது, சத்தம் வெளியே வரவில்லை. ஏலி வெறித்திருக்கிறாய் என்றான். ஆனால் தேவன் அந்த மௌன ஜெபத்தைக் கேட்டார் – 1 சாமுவேல் 1:13

### 2. பெரும்பாடுள்ள ஸ்திரீ – தொடுதலின் ஜெபம்

பன்னிரெண்டு வருஷம் கூட்டத்தில் மறைந்து வாழ்ந்தாள். யாருக்கும் தெரியாமல் இயேசுவின் வஸ்திரத் தொங்கலைத் தொட்டாள். வெளியரங்கமான ஜெபம் இல்லை, விசுவாசமான ஒரு தொடுதல். இயேசு சொன்னார், "மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" - லூக்கா 8:48

சகோதரியே, உனக்கு ஒரு மறைவான இடமுண்டா? அது உன் படுக்கை அறையின் ஒரு மூலையாக இருக்கலாம். காருக்குள் இருக்கும் ஐந்து நிமிடமாக இருக்கலாம். இடம் முக்கியமில்லை. அங்கே நீயும் தேவனும் மட்டும் இருக்கிறீர்களா என்பது தான் முக்கியம். இந்த மாதம் ஒரு தீர்மானம் எடுப்போமா? நாளுக்கு குறைந்தது பத்து நிமிடம் போனை அணைத்துவிட்டு, கதவைப் பூட்டி, பிதாவோடு மட்டும் இருப்போம். அங்கே நம் முகமூடிகள் தேவையில்லை. "அப்பா நான் களைந்துவிட்டேன்" என்று சொல்லலாம். மறைவான இடத்தில் நாம் பெறுகிற பெலன், வெளியரங்கத்தில் நம்மை நிலைநிறுத்தும்.

ஜெபம்: பரம தகப்பனே, மனுஷர் மெச்சும் படி ஓடிக்கொண்டிருக்கும் என்னை மன்னியும், மறைவில் உம்மைத் தேடவும், உம்முடைய சமுகத்தில் பெலன் அடையவும் எனக்கு கற்றுத்தாரும். சோர்ந்துபோன என் சகோதரிகளை உம்முடைய புதிய கிருபையால் நிரப்பும். இயேசுவின் நாமத்தில், ஆமேன்.

Article by

**SIS. GODSHILIN BERLIN JOSE**

Women's Fellowship




பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள். "மனுஷனுடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரம பிதா உங்களுக்கு மன்னிப்பார்" மத்தேயு 6:14.

### மனதார மன்னியுங்கள்:

பேதுரு ஒருநாள் இயேசுவிடம் வந்து, ஆண்டவரே என் சகோதரன் எனக்கு விரோதமாய் குற்றம் செய்தால் நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? எழுதரம் மட்டுமோ என்று கேட்டார். அதற்கு ஆண்டவர் இயேசு எழுதரம் மாத்திரம் அல்ல ஏழெழுபது தரம் மன்னிக்க வேண்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். ஒருவர் நமக்கு செய்த செயல் தவறாக இருந்தாலும், நான் மன்னிக்கப்பட்டு இருக்கிறேன் என்பதை உணரும் போது நாமும் பிறரை மன்னிக்கின்றவர்களாய் இருப்போம். மன்னியுங்கள் அப்பொழுது உங்களுக்கும் மன்னிக்கப்படும். இந்த உலகில் ஒரு பழம் மாத்திரம் 9 சுவைகளைக் கொண்டது. அது எந்த பழம் என்று தெரியுமா? அதுதான் ஆவியின் கனி.அதனுள்ளே அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியப்பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்ட கனிகளை தன்னகத்தே கொண்டது (கலாத்தியர் 5:22,23).

### ஆண்டவர் இயேசுவின் எதிர்பார்ப்பு:

ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கக் குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது (எபேசியர் 4:31,32). ஒருவருக்கொருவர் தயவாயும், மனம் உருக்கமுடையவருமாய் இருந்து, கிறிஸ்துவுக்குள் கர்த்தர் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். நாம் ஒருவரை மன்னிக்கும் போது, மன்னிக்கப்பட்டவர் மனம் திரும்புகிறார்; அவர் உணர்வடைகிறார். இயேசு தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி நம்முடைய பாவங்களைக் கழுவினார். ஏன் நாம் மற்றவர்களை மன்னிக்க கூடாது? மன்னிப்பதன் மூலம் கர்த்தர் தாமே நம்முடன் ஆளுகை செய்கிறார். ஆண்டவர் இயேசுவை சிலுவையில் அறைந்த போது, பிதாவே இவர்களை மன்னியும் என்று நமக்காக வேண்டுதல் செய்தார் (லூக்கா 23:34). நாம் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாய் இருந்து, மற்றவர்களை மன்னிக்க வல்லவர்களாக வாழ்ந்திட அழைக்கப்படுகிறோம்.

### இன்றையக் காலகட்டம்:

இப்போதையக் காலம் பாவத்தால் நிறைந்து காணப்படுகிறது. மொபைல் போன் மூலமாக சிறு பிள்ளைகள்,வாலிபர்கள் தங்களுடைய வாழ்க்கையை இழந்து, பாவத்திற்கு நேராகச் செல்கிறார்கள். கணவன்-மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடு, அங்கே மன்னிப்பு பரிமாறப்பட வேண்டும். பெற்றோர்களைப் பிள்ளைகள் அன்பின்றி முதியோர் இல்லத்தில் சேர்க்கின்றனர், ஆனால் அன்பானப் பெற்றோர் பிள்ளைகளை மன்னிக்கின்றனர். இன்றையச் சூழலில் அன்பின்மையால் பாவங்கள் பெருகிப் போனது,மன்னிக்கும் தன்மைக் குறைந்துப் போனது. வேலை செய்கின்ற இடங்களில் சுயநலமும்,அதிகாரமும் பெருகி ஆண்டவர் இயேசுவின் வழியை மறந்து, மன்னிப்பைத் தர மறுக்கின்ற மானுடமாக காணப்படுகிறது. எனவே, நாம் மன்னிக்கும் குணம் உள்ளவர்களாக மாறும்போது,கர்த்தர் நம்முடைய பாவங்களைக் கழுவி, நம்முடைய வேண்டுதல்களுக்கு அருள் செய்வார். ஆண்டவர் இயேசு சொன்ன திருவார்த்தைகளின்படி நடப்போம்,அவர் வழியே வாழ்வோம். இயேசு கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பார், ஆமென்.

Article by

**MRS.D.BERLIN SUNIBA**

Youth Fellowship

# PSALMS 16-30
# சங்கீதம் 16-30

1. எதைப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைப் பெருகும்?
2. மறைவிடங்களில் பதிவிருக்கிறது எது?
3. தாவீது குறிப்பிடும் வில் எப்படிப்பட்டது?
4. ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது எது?
5. கர்த்தர் எங்கிருந்து ஜெபத்தைக் கேட்பார்?
6. நாணேற்றப்பட்டது என்ன?
7. மெழுகுபோல் ஆனது எது?
8. நிரம்பி வழிகிறது எது?
9. கர்த்தருடைய சமூகத்தை நாடுகிற சந்ததி யார்?
10. கர்த்தருடைய இரகசியம் எங்கிருக்கிறது?
11. தாவீதுடைய கால் எங்கே நின்றது?
12. கர்த்தர் எதைத் தேடச் சொன்னார்?
13. கர்த்தர் எந்த சத்தத்தைக் கேட்டார்?
14. கர்த்தர் உட்கார்ந்திருப்பது எங்கே?
15. கர்த்தர் எந்தக் கட்டினால் இடைக்கட்டினார்?

## ஜூன்-2026 மாத வினாவிற்கான விடைகள்

1. சங் 1:4
2. சங் 2:11
3. சங் 3:6
4. சங் 4:4
5. சங் 5:7
6. சங் 6:10
7. சங் 7:10
8. சங் 8:3
9. சங் 9:15
10. சங் 10:14
11. சங் 11:7
12. சங் 12:6
13. சங் 13:5
14. சங் 14:7
15. சங் 15:4

## ஜூன்-2026 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. ஜெனிபர் பால்,

திருமதி. ஜோனிஸ் ஹெர்ஷல்,

செல்வி. அஜின்ஷா,

திருமதி. பிப்ளின் நெல்சன்,

திருமதி. ரோஸ்மேரி,

திருமதி. ராதிகா செல்வக்குமார் (மே,ஜூன்)

திருமதி. ஹேமலதா ஸ்டீபன்.

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

## JUNE-2026 - WINNERS


KIDS COLOURING: INIYAL EVANGELINE

WORD SEARCH: INIYAN IMMANUEL

CROSS WORD: INIYAL EVANGELINE


FIND THE WAY: INIYAN IMMANUEL

# CBS – JUNIOR B






JEHOASH






JESSICA






CHRIS GABRIEL






HAZEL HARTLYN






KEVIN






JOSHUA

TEACHER - MRS. JEYANTHA BELFER

Name:

Date:

**Kids** Coloring



Name:____________________ Date:____________________

Find the words listed. Words may appear forward, backward, up, down or diagonal. Words may overlap and cross each other. When you have found a word, be sure to circle it and cross it off the list.



# BIBLE
## Word Search



| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | T | G | M | K | G | H | C | V | N | J | K | N | M | V | C | N | C | T | B |
| R | G | T | M | O | L | F | N | F | L | O | Y | Q | W | P | Z | O | V | K | B |
| V | J | Y | D | H | Z | T | T | L | M | R | I | Z | X | J | J | A | D | X | G |
| L | M | I | R | A | C | L | E | S | A | N | D | X | L | S | X | H | K | L | A |
| Z | N | G | N | M | B | J | D | M | X | M | R | P | I | R | U | N | P | C | R |
| L | T | D | N | O | Z | E | G | N | J | R | A | V | V | F | O | S | J | Q | D |
| N | E | I | C | T | I | T | T | T | A | R | G | L | B | I | I | C | E | S | E |
| X | N | V | Q | M | N | T | L | H | A | L | E | M | T | Q | R | C | E | J | N |
| M | C | A | M | A | R | V | A | B | L | G | D | C | F | E | P | L | U | F | Q |
| V | O | D | B | D | V | S | L | V | N | E | E | E | A | G | P | R | L | R | G |
| V | M | S | C | A | Q | E | H | A | L | R | H | T | S | I | B | X | W | K | C |
| S | M | L | E | B | S | M | P | E | R | A | I | E | C | I | W | A | R | K | V |
| T | A | Q | R | S | G | N | E | U | P | O | S | S | M | Z | M | W | T | Z | H |
| E | N | S | S | O | R | C | S | L | N | H | I | N | V | F | R | O | X | N | Z |
| H | D | P | H | N | H | E | O | L | R | D | E | R | G | F | M | B | R | Z | H |
| P | M | N | L | B | R | N | J | Z | Y | W | F | R | P | D | J | M | J | P | M |
| O | E | N | B | I | J | S | E | R | M | O | N | A | D | N | R | M | C | R | L |
| R | N | B | M | B | T | G | L | Y | R | X | K | F | I | G | E | C | A | R | G |
| P | T | N | M | L | V | E | X | O | D | U | S | X | T | T | M | F | D | C | M |
| K | S | P | L | E | M | L | J | R | E | Y | A | R | P | C | H | Z | G | N | Y |

ADAM
ANGEL
ARK
BETHLEHEM
BIBLE
CREATION
CROSS
CRUCIFIXION
DAVID
DISCIPLES
EXODUS
FAITH
GARDEN
GOD
GRACE
JESUS
JOSEPH
MARY
MIRACLES
MOSES
NOAH
PARABLES
PRAYER
PROMISED LAND
PROPHETS
RESURRECTION
SALVATION
SERMON
SHEPHERD
TEN COMMANDMENTS










FIND THE WAY

Name : ........................................

# Noah's Ark Maze


After Noah built the ark, God caused at least two of each kind of animal to go into the ark.
Draw a line from each pair of animals to the ark.



CROSS WORD

Name : ........................................................................

# JOSEPH




## ACROSS

1) "You are _____; you have come to see the nakedness of the land." (Genesis 42:9 ESV)

5) Joseph's brothers sold him for twenty pieces of _______. (Genesis 37:28 ESV)

6) Who bought Joseph from the Ishmaelites? (Genesis 39:1 ESV)

8) To which brother did Joseph serve more food? (Genesis 43:34 ESV)

## DOWN

1) Which brother did Joseph keep as his prisoner in Egypt? (Genesis 42:24 ESV)

2) The famine lasted for ________ years. (Genesis 41:54 ESV)

3) Joseph helped Pharaoh understand his strange _________. (Genesis 41:25 ESV)

4) Joseph was ______ years old when he began working for Pharaoh. (Genesis 41:46 ESV)

6) Joseph's brothers threw him into a _____. (Genesis 37:24 ESV)

7) Israel gave Joseph a special ______. (Genesis 37:3 ESV)

# JULY - 2026

| | |
|---|---|
| 01-JULY | Mr. A. Ravichandran |
| 01-JULY | Ms. Mckayla Davelyn |
| 02-JULY | Mrs. Jackquline Princy |
| 04-JULY | Master. A. Eric Aaron |
| 05-JULY | Mrs. Jessy Beula John Joseph |
| 05-JULY | Master. Joshuva Koshy |
| 05-JULY | Ms. Isabella Jane |
| 05-JULY | Mr. Thanu Lingam |
| 05-JULY | Mr. M. Prasanna Kumar |
| 07-JULY | Mrs. Hepsi Bai Nesamony |
| 08-JULY | Ms. Amala Charles |
| 09-JULY | Mrs. R. Gold Jency |
| 10-JULY | Master. Eric Jayden |
| 11-JULY | Ms. Elianna Kacy |
| 11-JULY | Master. Aishlin Babu |
| 11-JULY | Mr. Deenith |
| 13-JULY | Mr. Bhaskar Rajaram |
| 13-JULY | Mrs. Pamela Rachel Daniel |
| 13-JULY | Mr. Sutharson Selva Raj |
| 14-JULY | Mr. Jason Samuel |
| 15-JULY | Mr. Sankaran Chinniyan |
| 17-JULY | Mrs. Mercy Rajam |

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

# JULY - 2026

| | |
|---|---|
| 18-JULY | Ms. Ruth Radhika |
| 19-JULY | Mrs. Sangeetha |
| 21-JULY | Mr. Franklin Christopher |
| 22-JULY | Mrs. Baby Christy Monalizha |
| 23-JULY | Mr. Ravindra |
| 23-JULY | Mrs. Vimala Thanga Raj |
| 25-JULY | Mrs. Angelin Nalini |
| 25-JULY | Mr. Timotheus Dill Suresh |
| 26-JULY | Mrs. Roselin Tamil Selvi |
| 28-JULY | Mrs. Beeta Christopher |
| 28-JULY | Mr. David Sornabalan |
| 29-JULY | Master. Mervin Samuel |
| 29-JULY | Ms. Jania Preni |
| 29-JULY | Mr. Dennis Roger |
| 29-JULY | Master. Jaidan Suji Kumar |
| 30-JULY | Ms. Bernicia Leenus Obed |
| 31-JULY | Mr. Kingsly Stoobert |
| 31-JULY | Mrs. G.S. Biji Kumari |

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

# JULY Wedding ANNIVERSARY

**02-JULY**
Mr. Leenus Patrick Obed
&
Mrs. Iswarya Obed

**02-JULY**
Mr. V. Arun Kumar
&
Mrs. K. Santhiya

**03-JULY**
Mr. S. Ashok Kumar
&
Mrs. Philomina

**04-JULY**
Mr. A.S. Kannan
&
Mrs. Lavanya Kannan

**06-JULY**
Mr. K. Arunkumar
&
Mrs. S. Banu Priya

**08-JULY**
Mr. George Rose
&
Mrs. Anitha Geroge

**09-JULY**
Mr.. Franklin Christopher
&
Mrs. Catherine Judith F

**12-JULY**
Mr. David Livingston
&
Mrs. Beula Rani Livingston

**14-JULY**
Mr. C. Rajesh Anbu
&
Mrs. D. Mercylin Latha

**14-JULY**
Mr. Jonesly king
&
Mrs. Melbin Subithra

**16-JULY**
Dr. N. Giftus Marvin
&
Mrs. Dr. Ashley Giftus

**25-JULY**
Mr. Sankaran Chinniyan
&
Mrs. Kalyani Sankaran

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14













# CBS KIDS PROGRAM

20

06

20

26






# MEN'S FELLOWSHIP SPECIAL SERVICE





# MEN'S FELLOWSHIP SPECIAL SERVICE



# OUR NEW COMMITTEE 2026-2029



**Belfer John**
Secretary



**Jein Rajavel**
Vice President



**Basil Shallu**
Treasurer



**Jose Selvakumar**
EC Member / Mens Fellowship Coordinator



**Ashok Kumar**
Warden / Outreach Ministry Coordinator



**Prem Jenifer**
EC Member / Choir Coordinator



**Suji Kumar**
EC Member / CBS Coordinator




EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY